**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.** 83/2022

**Date:** 30.06.2025.

வா.சா.2 - திரு. கணேஷ்குமார்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் Zonal Deputy Block Development Officer ஆக பணியில் இருக்கிறேன். கடந்த 06.06.2025 முதல் அந்த பணியில் இருக்கிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் வழக்கு சம்பந்தமாக பிளான் அப்ரூவல் தாக்கல் செய்யும்படி குறிப்பிடப்பட்டிருந்தது. வழக்கு பட்டிகை சொத்து புதிய புல எண்.450/9பி என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.ஆ– 1 ஆவணம் புதிய புல எண் 450/9A விற்கானது என்றால், சரிதான். பிரதிவாதியின் சொத்தின் மொத்த விஸ்தீரண்ம 1.5 சென்டு என்றால், சரிதான். முதல் விசாரணையில் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வரைப்படத்தின் படி , அவர் கட்டிய வீடு 1 சென்ட் கூடுதலாக அமைந்துள்ளது என்பதற்கு அடிப்படை ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது பிரதிவாதி வீடு கட்டுவதற்கு எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்ட அனுமதி வரைப்படம் என்றால், சரிதான். <u>அது பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>. இந்த Building Plan Approval ன் நகல் எங்கள் அலுவலக கோப்புகளில் இருந்தும் , அதனை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். பிரதிவாதி எங்கள் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட அனுமதி வரைப்படத்தின் படிதான் தனது வீட்டை கட்டியிருக்கிறார் என்றால், சரிதான். பொதுவாக கடற்கரை

அருகில் இருக்கும் வீடுகளில், இரண்டு வீடுகளுக்கு இடைப்பட்ட பகுதியில், 2 அடி பொதுபாதை விடுவது வழக்கம் என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.